அறிவும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6002/A/2024**

திரு. த.விஸ்வநாதன் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம், -- பொது அதிகார அமைப்பு
திருப்பூர் மாவட்டம் - 638 701.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. த.விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. | |
| பொது அதிகார அமைப்பு | திரு.மு.சுந்தரமூர்த்தி<br>பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார் |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 22.02.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், காங்கயம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1.1.2016 முதல் நாளது 22.02.2024 வரை பணிபுரியயும் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோர் பெயர் விபரங்களை அவர்களது | |

| | |
|---|---|
| பணிகால விபரங்களுடன் அளிக்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ----- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 30.03.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 06.05.2024 |

2. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், திரு.மு.சுந்தரமூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு த.அ.உ.ச.மூ.மு.911/2024/அ4, 10.05.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும், ப.மு.2591/2024/அ4, 25.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத்தகவல் அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் இன்றைய தின விசாரணைக்கு ஆஜராகி, தனது கருத்தை எடுத்துரைக்கத் தவறிய நிலையில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது, எனவே, ***பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இம்மேல்முறையீட்டு வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6002/A/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் - 638 701.

**<u>மனுதாரர்</u>**

திரு. த.விஸ்வநாதன்
8/9A, ஜி.கே.நிலையம்,
கே.எஸ்.ஆர். வீதி,
தாராபுரம் ரோடு,
காங்கயம்,
திருப்பூர் - 638 701.

Copy to file

KRM/PA 08.07.2026